**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.315/2019**

**Defense side Witness : 1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : பாண்டியராஜன் | **Caste** | : |
| **Father's Name** | : பீதாம்பரம் | **Calling** | : டைல்ஸ் வேலை |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : 42/2025 |
| | | **Dated** | : 13.11.2025 |

**13.11.2025**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**புகார்தாரர் ஆஜர் இல்லை . U/s.279 of petition filed and allowed.**

**<u>எதிரி தரப்பில் முதல் விசாரணை</u>**

1. எதிரி என்னுடைய மனைவி ஆவார். நான் 2018ம் ஆண்டு சன் செக்கிரியூட்டியில் செக்கிரியூட்டி கார்டாக வேலை செய்துவந்தேன் . என்னுடன் மகேஷ்வரன் பணிசெய்துவந்தார். அவரிடம் நான் 20,000 ரூபாய் கடன் பெற்றேன். அதற்கு அவர் பொறுப்பிற்காக இரு காசோலை கேட்டார். அதற்கு நானும் எனது K.V.B வங்கியின் இரு வெற்று காசோலை கையொப்பம் மட்டும் இட்டு கொடுத்தேன். மற்றும் 100 ரூபாய் பத்திரம் வைரமணி என்ற பெயரில் வாங்கி வெற்று பத்திரத்தை கையொப்பம் மட்டும் இட்டு அவரிடம் கொடுத்தேன். வாங்கிய பணத்திற்காக மாத மாதம் 5 வட்டி வீதமாக 1000 ரூபாய் கொடுத்துவந்துள்ளேன். பின்பு பிள்ளைகளின் பள்ளிச்செலவிற்காக மீண்டும் அவரிடம் 20,000 ரூபாய் கடனாக பெற்றேன் அதற்கு அவர் ஆதரவாக என்னுடைய மனைவியின் காசோலையை கேட்டார்.

2.அதற்கு நான் என் மனைவிக்கு தெரியாமல் எனது மனைவியின் INDIAN BANK ஒரு காசோலையை எனது மனைவி ஏற்கனவே கையொப்பம் மட்டும் இட்ட வெற்று காசோலையை நான் எடுத்து மகேஷ்வரனிடம் கொடுத்தேன். அதற்கும் வாங்கிய பணத்திற்காக மாத மாதம் 5 வட்டி வீதமாக 1000 ரூபாய் கொடுத்துவந்துள்ளேன். ஜனவரி மாதம் 4ம் தேதி 2019ம் வருடம் பொங்கலுக்கு முன்பு இரண்டு கடன் தொகையையுமான ரூ. 40,000/-த்தை நான் மகேஷ்வரனுக்கு கொடுத்து அடைத்துவிட்டேன். அன்றே மகேஷ்வரனிடம் நான் கொடுத்த காசோலையை கேட்டபோது அவர் இரண்டு நாட்கள் கழித்து தருகிறேன் என்று சொன்னார். அதற்கு அவர் தர மறுத்து கூடுதல் வட்டி இருக்கிறது என்று தர மறுத்துவிட்டார். நானும் சமாதானம் பேசிக் பார்த்தேன். ஆனால் அவர் அதற்குள் இவ்வழக்கை கொடுத்துவிட்டார். புகார்தாரரின் வழக்கறிஞர் அறிவிப்பு எனது மனைவியின் பெயருக்கு வந்தபிறகுதான் எனது மனைவிக்கு மேற்படி விபரம் தெரியவந்தது. அதன்பின்பு அன்றே தாலுகா காவல் நிலையத்திற்கு சென்று சொன்னோம். நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்ளுமாறு சொன்னார்கள். அதன்பின்பு எனது மனைவி வழக்கறிஞர் மூலம் பதில் அறிவிப்பு அனுப்பினார்.

<u>புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நானும் எனது மனைவியும் திருமணம் ஆனதினத்திலிருந்து ஒரே வீட்டில்தான் இருந்து வருகிறோம் என்றால் சரிதான். என்னுடைய வரவு செலவு, கொடுக்கல் வாங்கல் அனைத்தும் எனது மனைவிக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்னுடன் வேலைபார்த்த மகேஷ்வரன் மூலமாக அவரது மனைவி எனக்கும் என் மனைவிக்கும நன்கு பழக்கம் என்றால் சரியல்ல. மகேஷ்வரன் வட்டிக்கு பணம் கொடுக்கும் பழக்கம் இருக்கிறதா என்று ஆவணங்கள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் சொன்னதுபோல் புகார்தாரரிடம் 2 தவணைகளாக 40,000 வாங்கியதற்கோ, வட்டி கட்டியதற்கோ ஆவணங்கள் எதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் புகார்தாரரின் கணவரிடம் கடனை திருப்பி செலுத்திவிட்டு, எனது மற்றும் எனது மனைவியின் ஆவணங்களை திருப்பி கேட்டதாகவும், அதனை அவர் கொடுக்க மறுத்ததாகவும் சொல்லிய நிலையில் அதன்பொருட்டு அவர் மீது சட்ட நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. புகார்தாரர் என் மனைவிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை நான் படித்துப் பார்த்தேனா என்றால் படித்துப் பார்த்தேன். நான் எனது மனைவி அனுப்பிய பதில் அறிவிப்பை படித்துப் பார்த்தேனா என்றால் படித்துப் பார்த்தேன்.

2. நான் அந்த பதில் அறிவிப்பில் எனது மனைவிக்குத் தெரியாமல் அவரது காசோலையை நான் பெற்று புகார்தாரரின் கணவருக்கு கொடுத்ததாக குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில்

சொன்னதுபோல் தாலுகா காவல் நிலையத்தில் எந்த தேதியில் யாரிடம் புகார் கொடுத்தேன் என்றால் தேதி ஞாபகம் இல்லை. எனது மனைவி புகார்தாரரிடம் வழக்கில் சொல்லியுள்ளவாறு ரூ.2,00,000/- கடன் பெற்றுக் கொண்டுஅதனை திருப்பி செலுத்தும் விதத்தில் இந்த வழக்கு காசோலையை புகார்தாரர் கொடுத்துள்ளார், அவ்வாறு கொடுக்கும்போதே அவரது வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்று தெரிந்தே புகார்தாரரை ஏமாற்றி மோசடி செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் இந்த குற்ற செயலை செய்துள்ளார் என்றாலும், இந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக நான் புகார்தாரரின் கணவரிடம் இந்த வழக்கு காசோலையை கொடுத்ததாக என் மனைவிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை**</u>

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2025.11.13 14:22:35 +0530

Judicial Magistrate No.II
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.315/2019**

**Defense side Witness : 2**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : ஜீவிதா | **Caste** | : |
| **Father's Name** | : பாண்டியராஜன் | **Calling** | : வீட்டுக்குடித்தனம் |
| **Village** | : திண்டுக்கல் | **Religion** | : |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : **37/2025** |
| | | **Dated** | : **13.11.2025** |

**13.11.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**புகார்தாரர் ஆஜர் இல்லை . U/s.279 of petition filed and allowed.**

**<u>எதிரி தரப்பில் முதல் விசாரணை</u>**

1. இவ்வழக்கின் புகார்தாரர் எனக்குத் தெரியுமா என்றால் இதற்கு முன்னால் தெரியாது. இவ்வழக்கிற்கு பின்னிட்டுத்தான் தெரியும். எனக்கு இவ்வழக்கைப் பற்றி எதுவும் தெரியாது. இந்த வழக்கைப் பற்றி வழக்கறிஞர் அறிவிப்பு வந்தபிறகுதான் எனக்கு என்னுடைய காசோலையை எனது கணவர் எடுத்து அவருடன் வேலைபார்க்கும் மகேஷ்வரனுக்கு அவர் பெற்ற கடனுக்காக அவர் அந்த காசோலையை கொடுத்திருக்கிறார் என்ற விபரம் தெரியவந்தது. என்னுடைய காசோலையை நான் கையொப்பம் மட்டும் இட்டு வைத்திருந்தேன். எனது கணவர் மகேஷ்வரனிடம் கடனாக ரூ. 20,000/– பெற்றிருக்கிறார் என்றும், அதற்காக அவர் மாதம் மாதம் வட்டி 5வீதமாக மாதம் ரூ. 1000/– செலுத்திவந்தார் என்றும், அதற்கு ஆதரவாக என்னுடைய காசோலையை எடுத்து அவர் கொடுத்திருக்கிறார் என்ற விபரம் வழக்கறிஞர் அறிவிப்பு வந்தபிறகுதான் தெரியும்.

2. அதன்பின்பு கடனை முழுவதுமாக அடைத்துவிட்டார் என்று எனது கணவர் சொன்னார். வழக்கறிஞர் அறிவிப்பு வந்தபின்பு புகார்தாரரிடம் பேசலாம் என்று தாலுகா காவல் நிலையத்திற்கு சென்றோம். அதற்கு அவர்கள் நீதிமன்றத்திற்கு செல்லுமாறு அறிவுறுத்தினார்கள். அதன்பின்பு நான் என்னுடைய வழக்கறிஞர் மூலம் பதில் அறிவிப்பு அனுப்பினேன். நான் புகார்தாரரிடம் நேரடியாக கடன் எதும் வாங்கவில்லை. அவர் யார் என்று எனக்குத் தெரியாது. அதனால் இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும்.

<u>புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் வீட்டுக்குடித்தனம் செய்துவருகிறேன் என்றால் சரிதான். நானும் எனது கணவரும் திருமணம் ஆனதிலிருந்து சேர்ந்துதான் வாழ்நது வருகிறோம் என்றால் சரிதாதன். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 ஆன காசோலை என்னுடையதுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது என்றால் சரிதான். மகேஷ்வரனை என் கணவருடன் வேலை பார்த்தால் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரியல்ல. எனக்குத் தெரியாது. பொதுவாக வீட்டுக்குடித்தனம் செய்யும், தொழில் எதும் செய்யாத நபர்கள் வெற்று காசோலையில் கையொப்பம் செய்து வைத்திருக்கமாட்டார்கள் என்றால் சரிதான். ஆனால் நான் என்னுடைய லோனிற்காக என்னுடைய காசோலையில் கையொப்பம் செய்து வைத்திருந்தேன் அதை எனது கணவர்தான் எடுத்துச் செல்வார்.

2. மேற்படி விபரத்தை என்னுடைய பதில் அறிவிப்பில் லோனுக்காக நான் கையொப்பம் மட்டும் இட்டு வைத்திருந்த காசோலையை எனது கணவர் எடுத்துச் செல்வார் என்ற விபரத்தை நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது கணவர் நான் கையொப்பம் மட்டும்இட்டு வைத்திருந்த காசோலையை என்னென்ன காசோலை என்று நான் சரிபார்த்து வைப்பேன் என்றால் இல்லை. என்னுடைய காசோலையை எனது கணவர் என்னை ஏமாற்றி மகேஷ்வரனுக்கு கொடுத்திருக்கிறார் என்பது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் ஏதும் அளித்தேனா என்றால் அளிக்கவில்லை. நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் காவல் நிலையத்தில் புகார் அளித்ததாக சொல்லியுள்ளபோது எந்ததேதியில் யாரிடம் புகார் கொடுத்தேன் என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது கணவர் மகேஷ்வரனிடம் கடன் வாங்கியதற்கோ அல்லது அந்த கடனை திருப்பி அடைத்ததற்கோ எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. நான் வழக்கில் சொல்லியுள்ளவாறு புகார்தாரரிடம் ரூ.2,00,000/-கடன் பெற்றுக் கொண்டு அதனை திருப்பி செலுத்தும் விதத்தில் இந்த வழக்கு காசோலையை புகார்தாரர் கொடுத்துள்ளேன் என்றும், அவ்வாறு கொடுக்கும்போதே எனது வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்று தெரிந்தே புகார்தாரரை ஏமாற்றி மோசடி செய்யவேண்டும் என்ற எண்ணத்தில்

இந்த குற்ற செயலை செய்துள்ளேன் என்றாலும், இந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக என் கணவர் இந்த வழக்கு காசோலையை எனக்குத் தெரியாமல் புகார்தாரின் கணவரிடம் கொடுத்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C Digitally signed by DINESH KUMAR C Date: 2025.11.13 14:22:45 +0530

Judicial Magistrate No.II
Dindigul.